ET/SSS/2022(2023)/OL/62/T/Q/S-2

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

G. C. E. Ordinary Level | க.பொ.த. சாதாரண தரம் | **2022 (2023)**

# Student Seminar Series

## மாணவர் கருத்தரங்கு தொடர்

Practice Paper - முன்னோடி வினாப்பத்திரம்

# History

# வரலாறு



**Question Paper - I, II** | வினாப்பத்திரம் - **I, II** (மொழிமூலம்-தமிழ்)

Nenasa
The National e-learning Portal for The General Education

தொலைக்கல்வி மேம்பாட்டு பிரிவு | தேசிய மொழிகள் மற்றும் மானுடவியல் பிரிவு

දුරස්ථ අධ්‍යාපන ප්‍රවර්ධන ශාඛාව ජාතික භාෂා සහ මානව ශාස්ත්‍ර ශාඛාව

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education, Sri Lanka

| 33 | T | I |
|---|---|---|

අ. පො. ස. සාමාන්‍ය පෙළ විභාගය - ශිෂ්‍ය සම්මන්ත්‍රණ මාලාව - 2022 (2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை- மாணவர் கருத்தரங்கு தொடர்- 2022 (2023)
G. C. E. Ordinary Level Examination – Student Seminar Series - 2022 (2023)

ඉතිහාසය I
வரலாறு I
History I

ஒரு மணித்தியாலம்

## வரலாறு I

கவனிக்க
- எல்லா வினாக்களுக்கும் விடையெழுதுக.
- 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க
- உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவிற்கும் உரிய வட்டங்களில் உமது விடைக்குரிய இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (x) இடுக.
- அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து அவற்றைப் பின்பற்றுக.

1. இராசரட்டை கால வரலாற்றை அறிய உதவும் நூல் எது?
   (1) சத்தர்மாலங்காரய (2) பெரகும்பா சிரித்த
   (3) திசர சந்தேசய (4) கவிசிலுமின

2. ரொபட் நொக்ஸ் உள்ளிட்ட பிரித்தானிய தேசிய கப்பற் குழு இந்நாட்டை வந்தடைந்த போது இங்கிருந்த ஆட்சியாளன்
   (1) இராஜாதி இராஜசிங்கன் (2) முதலாம் இராஜசிங்கன்
   (3) கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் (4) இரண்டாம் இராஜசிங்கன்

3. "அ" பகுதியில் தரப்பட்டுள்ள சொற்களுக்கு பொருத்தமான விடையை "ஆ" பகுதியிலிருந்து தெரிவு செய்க.

| 'அ' பகுதி | 'ஆ' பகுதி |
|---|---|
| 1. கிரேக்க | A. டிமுண்டோ |
| 2. உரோம | B. ரிபைரோவின் நூல் |
| 3. போர்த்துக்கேய | C. பூகோள சாஸ்திர பிரவேசம் |
| 4. ஒல்லாந்த | D. போல்டியசின் இலங்கை வரலாறு |
| | E. ஹியுங்சாங் பிக்குவின் தேச சஞ்சார அறிக்கை |

   (1) ABCD (2) ACBD (3) BCAE (4) DACE

4. 'வேவெல்கெட்டிய' கல்வெட்டு செதுக்கப்பட்டதன் நோக்கம் யாது?
   (1) விகாரை நிர்வாம் பற்றி அறிந்து கொள்ளல்
   (2) நபர்களின் சேவைகளை பாராட்டுதல்
   (3) குற்றவாளிகளுக்கான தண்டனைகளை தெரியப்படுத்தல்
   (4) அரசுக்கு செலுத்த வேண்டிய வரி பற்றிய தகவல்களை அறிந்து கொள்ளல்

5. கீழே தரப்பட்டுள்ள இடங்களுள் வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதனின் மிகப் பழைமையான கற்குகை வசிப்பிடமாக அமைவது
   (1) புளத்சிங்ஹல பாகியன்கல (2) கித்துள்கல பெலிலென
   (3) அத்தனகொட அலுலென (4) குருவிட்ட பட்டதொம்பலென

6. பண்டைய மயான வகைகளுள் ‘பரணி’ மயானங்கள் எவ்வரலாற்றுக் காலத்திற்குரியவையாகும்.
   (1) ஆரம்ப வரலாற்றுக் காலம் (2) வரலாற்றுக் காலம்
   (3) வரலாற்றுக்கு முற்பட்ட காலம் (4) முன்வரலாற்றுக் காலம்

7. அநுராதபுரத்தை “நுருபுரம்” எனக் குறிப்பிடும் சாசனம்
   (1) வல்லிபுரம் பொற் சாசனம் (2) வேவெல்கெட்டிய கல்வெட்டு
   (3) பனாகடுவ செப்பு சாசனம் (4) பதுளை தூண் கல்வெட்டு

8. பின்வருவற்றுள் கமிக ஒருவரினால் ஆற்றப்படாத பணியாக அமைவது
   (1) குளத்திலிருந்து நீரை விநியோகித்தல்
   (2) கிராமக் குளத்தை நிர்வகித்தல்
   (3) கிராமத்தவர்களிடையே ஏற்படும் பிரச்சினைகளை தீர்த்தல்
   (4) குளத்தொகுதி ஒன்றை நிர்வகித்தல்

9. திரிபீடகம் நூலுருப் பெறுவதற்கு முன்னர் பௌத்த போதனைகளை மனனஞ் செய்து வந்த பிக்குமார் அழைக்கப்பட்ட விதம்
   (1) சதிவிஹரிய (2) பாணக (3) அந்தேவாசி (4) தேரர்

10. “நீர் நிலைகளில் வாழும் உயிரினங்களைக் கொல்லக் கூடாது” எனும் சட்டத்தை பிறப்பித்த மன்னன்
   (1) நிசங்கமல்லன் (2) நான்காம் மகிந்தன்
   (3) நான்காம் உதயன் (4) ஆமண்ட காமினி அபயன்

11. பண்டைய சமூகத்தில் கிராமத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் தலைமைத்துவத்தை பெற்றுக் கொள்வதற்கு ஏதுவாக அமைந்த பிரதான காரணியாக அமைவது
   (1) மரபுவழி உரிமை
   (2) மிகை உற்பத்தி காணப்பட்டமை
   (3) பரம்பரை நிலவுரிமை
   (4) வர்த்தகத்தால் ஈட்டிய செல்வம்

12. பண்டைய சமூக அமைப்பின் கீழ் உற்பத்தியை நுகர்வோரை மாத்திரம் கொண்டமைந்த விடைத் தொகுதி
   (1) வியாபாரி, விவசாயி, கொல்லர், குடிகள்
   (2) இடையர்கள், குயவர்கள், கொல்லர்கள், வைத்தியர்கள்
   (3) விவசாயிகள், வைத்தியர்கள், பொருளாளர், வியாபாரிகள்
   (4) படகுத் துறையை நிர்வகிப்போர், ஆசிரியர்கள், வைத்தியர்கள், வர்த்தகப்பிரிவு தலைவர்கள்

13. பண்டைய சமூகத்தில் காணப்பட்ட பல்வேறு துறை சார்ந்தோர் நிரல் i இலும் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட பணிகள் நிரல் ii இலும் தரப்பட்டுள்ளன. நிரல் i இற்கு ஏற்ப நிரல் ii இனை ஒழுங்குபடுத்தும் போது வரும் சரியான விடை எது

| நிரல் - i | நிரல் - ii |
|---|---|
| 1. துனு ஆசார்ய | A. அம்பு எய்துபவர்கள் |
| 2. ஹஸ்தி ஆசார்ய | B. மட்பாண்டம் செய்பவர்கள் |
| 3. அஸ்வ ஆசார்ய | C. யானைகளைப் பழக்குவோர் |
| 4. சிதகர | D. குதிரைகளைப் பழக்குவோர் |
| | E. சித்திரக் கலைஞர் |

   (1) ABCD (2) ACDE (3) BCAE (4) DACB

14. பண்டைய இலங்கையரிடையே காணப்பட்ட பௌதீக விஞ்ஞான அறிவு தொடர்பான நீர் நிலையியல் கோட்பாடு பற்றி வெளிப்படுத்தும் சந்தர்ப்பம் ஒன்றாக அமைவது
   (1) ருவன்வெலிசாயவில் பொருத்தப்பட்டுள்ள வஜ்ரசும்பட்ட
   (2) சமனலவெவ பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்பட்ட இரும்பை உருக்கும் உலை
   (3) தெதிகம கொடவெஹெர விகாரையில் கண்டுபிடிக்கப்பட்ட வெண்கல விளக்கு
   (4) சீகிரியாவின் நீர்ப்பூங்கா

15. முதலாம் கஜபாகு மன்னனது சித்துல்பவ்வ கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள விடயம்
    (1) பண்டைய காலத்தில் வர்த்தகம் தொடர்பான சட்டதிட்டங்கள் காணப்பட்டமை
    (2) மிருகங்களை கொலை செய்தோருக்கு எதிராக தண்டனைகள் பிறப்பிக்கப்பட்டமை
    (3) சட்டங்களை மீறுவோருக்கெதிராக தண்டனைகளை வழங்குவதற்கான நீதிமன்றத் தொகுதியொன்று காணப்பட்டமை
    (4) சுற்றாடல் பாதுகாப்புடன் தொடர்புடைய சட்டதிட்டங்கள் காணப்பட்டமை

16. இல 16,17ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள வரலாற்று நிகழ்வுகள் இடம்பெற்ற கால அடிப்படையில் ஒழுங்குபடுத்தினால் கிடைக்கும் சரியான விடையாக அமைவது
    A. பெலிகலையில் தலதா மாளிகை அமைக்கப்பட்டமை
    B. கலிங்க மாகனின் பொலன்னறுவை ஆக்கிரமிப்பு
    C. புனித வெள்ளரசு மரக்கிளை இலங்கைக்கு கொண்டுவரப்பட்டமை
    D. கலிங்க மற்றும் பாண்டிய வம்சங்களுக்கிடையிலான அதிகாரப் போட்டி நிலவியமை
    (1) BADC (2) CDBA (3) CDAB (4) DCBA

17.
    A. வெலிவிட்ட சரணங்கர தேரருக்கு சங்கராஜா பதவி வழங்கியமை
    B. போர்த்துக்கேயரை இந்நாட்டிலிருந்து வெளியேற்றியமை
    C. தெல்கமுவ விகாரையில் மறைத்து வைத்திருந்த புனித தந்த தாதுவை கண்டிக்கு கொண்டு வந்தமை
    D. அம்பக்கே மரச் செதுக்கல் தேவாலயம் நிர்மாணிக்கப்பட்டமை
    (1) ACDB (2) CDBA (3) DCBA (4) BACD

18. கண்டி இராச்சிய பிக்குகளின் ஆலோசனைக்கு அமைய பர்மாவிலிருந்து குருமாரை வரவழைத்து உபசம்பதாவை நடாத்துவதற்கு மேற்கொண்ட முயற்சியில் தோல்வியடைந்த மன்னன்
    (1) ஸ்ரீ விக்கிரம இராஜசிங்க மன்னன்
    (2) இராஜாதி இராஜசிங்க மன்னன்
    (3) ஸ்ரீ விஜய இராஜசிங்க மன்னன்
    (4) கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்க மன்னன்

- கீழே தரப்பட்டுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 19 - 20 வரையான வினாக்களுக்கு விடையளிக்குக
    A. யாப்பகுவ இராசதானியின் படி வரிசை
    B. கடலாதெனிய விகாரையின் சிலைமனை
    C. அம்பக்க தேவாலயத்தின் மரச் செதுக்கல்கள்
    D. சீகிரிய பெண்களின் ஓவியங்கள்

19. பாண்டிய மற்றும் காம்போஜக மரபுகளின் அடிப்படையில் நிர்மாணிக்கப்பட்டதாக நம்பப்படுகின்ற நிர்மாணம் எது?
    (1) A (2) B (3) C (4) D

20. தென்னிந்திய கலை மரபின்படி நிர்மாணிக்கப்பட்டதாக கருதப்படும் கலைப் படைப்பு
    (1) A (2) B (3) C (4) D

21. கி.பி 1548 சீதாவாக்கையின் மன்னனான மாயாதுன்னையுடன் கூட்டுச் சேர்ந்த யாழ்ப்பாண ஆட்சியாளன்
    (1) பரராசசேகரம் (2) குலசேகரம் (3) எதிர்மன்ன சிங்கம் (4) முதலாம் சங்கிலி

22. முதன் முதலாக ஆசியாவுக்கு வருவதற்கான புதிய கடல் வழி மார்க்கத்தை கண்டுபிடித்த ஐரோப்பிய இனத்தவர்
    (1) பர்த்தலோமியோ டயஸ் (2) கிறிஸ்டோபர் கொலம்பஸ்
    (3) வாஸ்கொடகாமா (4) பேர்டினன்ட் மகலன்

23. கி.பி 1505ஆம் ஆண்டு போர்த்துக்கேயர் இலங்கைக்கு வரும் போது கோட்டையிலிருந்த ஆட்சியாளன்
    (1) எட்டாம் வீர பராக்கிரமபாகு (2) ஏழாம் புவனேகபாகு
    (3) ஆறாம் புவனேகபாகு (4) ஆறாம் பராக்கிரமபாகு

24. யாழ்ப்பாண ஆட்சியாளனான சங்கிலி மன்னனுக்கும், போர்த்துக்கேயருக்குமிடையில் மோதல்கள் ஏற்பட காரணமாக இருந்த பிரதான விடயம் யாது?
    (1) போர்த்துக்கேயருக்கு வர்த்தகப் பொருட்களை பெற்றுக் கொடுக்காமை
    (2) கண்டி மன்னனின் வர்த்தக நடவடிக்கைகளுக்கு யாழ்ப்பாண ஆட்சியாளன் உதவியமை
    (3) போர்த்துக்கேயரின் வர்த்தகக் கப்பல்களுக்கு தடையை ஏற்படுத்தியமை
    (4) சங்கிலி மன்னன் கப்பம் செலுத்துவதற்கு உடன்படாமை

25. இலங்கைக்கு முதன் முதலாக வருகை தந்த ஒல்லாந்து நாட்டவர்
    (1) சிபெல் த வாட்   (2) ஜோரிஸ் வான் ஸ்பில் பேர்ஜன்
    (3) வெஸ்டர் வோல்ட்   (4) லோரென்ஸோ டி அல்மேடா

- கீழே தரப்பட்டுள்ள அட்டவணையைப் பயன்படுத்தி 26 - 29 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிக்குக

| | |
|---|---|
| A - ஜேம்ஸ் ஹாகிரீவ்ஸ் | E - ரோலர் இயந்திரம் |
| B - டெம்லர் | F - தந்தி முறை |
| C - சாமுவேல் மோஸ் | G - மோட்டார் கார் |
| D - ஹென்றி வோட் | H - ஜெனீ இயந்திரம் |

26. நெசவுக கைததொழிலுடன தொடரபுடைய சோடி
    (1) AH   (2) BG   (3) CE   ..(4) CF

27. போக்குவரத்து துறையுடன் தொடர்புடைய சோடி
    (1) AH   (2) BG   (3) CH   (4) DE

28. தொடர்பாடல் துறையுடன் தொடர்புடைய சோடி
    (1) AH   (2) BG   (3) CF   (4) DE

29. இரும்பு உருக்கு கைத்தொழிலுடன் தொடர்புடைய சோடி
    (1) AH   (2) BG   (3) CF   (4) DE

30. கீழே தரப்பட்டுள்ள வரலாற்று நிகழ்வுகளை, இடம்பெற்ற கால அடிப்படையில் ஒழுங்குபடுத்தினால் கிடைக்கும் சரியான விடையாக அமைவது

    A - ஆங்கிலேயரால் திருகோணமலைத் துறைமுகம் கைப்பற்றப்பட்டமை
    B - இலங்கையின் கரையோரப் பிரதேசங்களை ஆட்சி செய்த ஒல்லாந்த ஆளுநர் பன் எங்கள் பெக்கிடம் "கியூ" கடிதம் ஒப்படைக்கப்பட்டமை
    C - வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கண்டி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டமை
    D - இலங்கை பிரித்தானிய முடிக்குரிய நாடாக பிரகடனப்படுத்தப்பட்டமை

    (1) ABCD   (2) BADC   (3) BCAD   (4) DABC

கீழே தரப்பட்டுள்ள A,B ஆகிய கூற்றுக்களின் அடிப்படையில் 31, 32 ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக

A. உணவு, நிலம், சமாதானம்
B. "நானே அரசு", நான் விரும்பும் எதுவும் நடைபெறும்

31. பிரான்சியப் புரட்சி தொடர்பில்
    (1) A யும் B யும் உண்மையானவை
    (2) A யும் B யும் தவறானவை
    (3) A உண்மையானது B தவறானது
    (4) A தவறானது B உண்மையானது

32. ரஷ்யப் புரட்சி தொடர்பில்
    (1) A யும் B யும் உண்மையானவை
    (2) A யும் B யும் தவறானவை
    (3) A உண்மையானது B தவறானது
    (4) A தவறானது B உண்மையானது

33. **"ஆயுத பலத்தால் 5 வருடங்களில் பெற்றவைகளை பாதுகாக்க, மேலும் 50 வருடங்கள் ஆயுதம் தரித்த நிலையில் இருக்க வேண்டி வரும்"** எனக் கூறிய ஜேர்மனிய சேனாதிபதி
    (1) வீ. ஐ. லெனின்   (2) இரண்டாம் வில்லியம்   (3) அடொல்ப் ஹிட்லர்   (4) வொன் வோல் கே

- கீழே ABCD என கருத்துச் சோடிகள் தரப்பட்டுள்ளன. சோடி ஒன்றில் தரப்பட்டுள்ள முதலாம் இரண்டாம் கருத்துக்களுக்கிடையேயான தொடர்பினைப் பரிசீலனை செய்து 34 - 37 வரையான வினாக்களுக்கு விடை தருக

A - 1 - சர்வதேச சங்கம்
2 - இரண்டாம் உலக மகா யுத்தம்

B - 1 - பொஸ்டன் தேநீர் விருந்து
2 - அமெரிக்க புரட்சி

C - 1 லுசிதானியா கப்பல் தாக்கப்பட்டமை
2 ஐக்கிய அமெரிக்கா போரில் பங்குகொண்டமை

D - 1 - சோல்பரி அரசியல் யாப்பு
2 - பாராளுமன்ற முறை

34. முதலாவதன் விளைவாக இரண்டாவது உருவாகியது என்பதைக் குறிக்கும் சோடி

(1) A (2) B (3) C (4) D

35. முதலாவதன் மூலம் இரண்டாவது அறிமுகப்படுத்தப்பட்டதை காட்டும் சோடி

(1) A (2) B (3) C (4) D

36. முதலாவதன் வீழ்ச்சி இரண்டாவதன் ஆரம்பத்திற்கு காரணமாக உள்ள சோடி

(1) A (2) B (3) C (4) D

37. இரண்டாவதன் ஆரம்பத்திற்கு முதலாவது காரணமாக அமைந்த சோடி

(1) A (2) B (3) C (4) D

38. 1905 ஆம் ஆண்டு ரஷ்யாவில் அரச எதிர்ப்பு நடவடிக்கை ஏற்பட உடனடிக் காரணமாக அமைந்த நிகழ்வு

(1) ரஷ்ய மக்களை இராணுவத்தில் சேர்த்துக் கொண்டமை
(2) மக்களைப் பாதிக்கும் வரி முறை
(3) ஊழல் மிகுந்த சர்வாதிகார ஆட்சி முறை
(4) யப்பானுடன் நடைபெற்ற யுத்தத்தில் ரஷ்யா தோல்வியடைந்தமை

A - பிரான்சும் ஜெர்மனியும் பகைமை நாடுகளாக உருவெடுத்தமை
B - ஹிரோஹிதோ அடிபணிந்தமை
C - ஜோன் மார்ஷல்லின் திட்டம்
D - இளவரசன் பிரான்ஸிஸ் பேர்டினன்ட் கொலை செய்யப்பட்டமை

39. முதலாவது உலக மகாயுத்தத்துடன் தொடர்புடைய விடைத் தொகுதி

(1) AB (2) AD (3) BC (4) BD

40. அத்திலாந்திக் உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட தலைவர்கள் இருவர்

(1) பிராங்ளின் ரூஸ்வெல்ட், மார்ஷல் டிட்டோ
(2) அப்துல் கமால் நசார், வூட்றோ வில்சன்
(3) வின்ஸ்டன் சர்ச்சில், பிராங்ளின் ரூஸ்வெல்ட்,
(4) மார்ஷல் டிட்டோ, வின்ஸ்டன் சர்ச்சில்,

*****

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education, Sri Lanka

33 | T | II

අ. පො. ස. සාමාන්‍ය පෙළ විභාගය - ශිෂ්‍ය සම්මන්ත්‍රණ මාලාව - 2022 (2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை- மாணவர் கருத்தரங்கு தொடர் - 2022 (2023)
G. C. E. Ordinary Level Examination – Student Seminar Series - 2022 (2023)

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි.
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time – 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**வரலாறு II** **நேரம்: 3 மணித்தியாலம்**

- பகுதி – I இல் முதலாம் வினா கட்டாயமானது
- பகுதி – II இல் நான்கு வினாக்களுக்கும், பகுதி III இல் ஒரு வினாவிற்கும் விடையளிக்குக
- எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடையளிக்குக.

## பகுதி - I

1 . (அ) (i) கீழே தரப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அனைத்தையும் வழங்கப்பட்டுள்ள இலங்கைப் புறவுருவப் படத்தில் குறித்துப் பெயரிடுக.

**வளவ கங்கை, யோத வாவி, கலா ஓயா, றைகம, கோணேஸ்வரம் கோயில், அலுகல்கே, சீகிரிய, சூகரதித்த, கம்பளை, மாத்தளை, நல்லூர், சல்வத்தொட்ட** (12 புள்ளிகள்)

(ii) கீழே தரப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அனைத்தையும் உலகப் புறவுருவப் படத்தில் குறித்துப் பெயரிடுக.

**வெனிஸ், மலாயா தீபகற்பம், கருங்கடல், இலண்டன், மும்பாய், ஹிரோஷிமா** (6 புள்ளிகள்)

(ஆ) (i) கீழே ABCD எனத்தரப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை ஒழுங்குமுறைப்படி உங்கள் விடைத்தாளில் எழுதுக.

A – பியங்குதிஸ்ஸ விகாரையை நிர்மாணித்த அமைச்சர் ரிஷிகிரி பற்றிய தகவல் அடங்கிய சாசனம்

B – ஆரிய சக்கரவர்த்தியை தோற்கடித்த சப்புமல் குமாரன் எப்பெயரில் கோட்டையின் ஆட்சியாளனானான்.

C – சேர். பொன்னம்பலம் அருணாச்சலம் அவர்கள் எச்சங்கத்தின் முதல் தலைவராக தெரிவானார்?

D – கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்க மன்னனின் ஆட்சிக்காலத்தில் கண்டி மீது ஆக்கிரமிப்பு மேற்கொண்ட ஒல்லாந்து ஆளுநர் (4 புள்ளிகள்)

- A , B ஆகிய எழுத்துக்களால் காட்டப்பட்டுள்ள படங்களை அவதானித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை வினா இலக்க ஒழுங்கு முறைப்படி உங்கள் விடைத்தாளில் எழுதுக.

(ii) 1. உரு A இல் காட்டப்பட்டுள்ள நிர்மாணம் யாது?
2. இந் நிர்மாணம் எவ்விராச்சியத்திற்குரியது?
3 .இதனை நிர்மாணிக்க பயன்படுத்தப்பட்ட ஊடகம் யாது?
4 .இவ்வழிபாட்டிடம் எச்சமயத்தவரினதாகும்? ( 4 புள்ளிகள்)



உரு A

(iii) 1. உரு B இல் காட்டப்பட்டுள்ள நபர் யார் ?

2. இவர் எந்நிர்வாகக் குழுவின் தலைவராக விளங்கினார் ?

3. இவரால் தோற்றுவிக்கப்பட்ட அரசியல் கட்சி எது ?

4. இவரால் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது பல்நோக்கு அபிவிருத்தித் திட்டம் எது? ( 4 புள்ளிகள்)



உரு B

## பகுதி II

2 . (i) இலங்கை பற்றிய தகவல்கள் உள்ளடங்கிய தென்னிந்திய இலக்கிய நூல்கள் மூன்று எழுதுக. (3 புள்ளிகள்)

(ii) வரலாற்றைக் கற்பதற்கு இலக்கிய மூலாதாரங்களை பயன்படுத்தும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள் நான்கினைக் குறிப்பிடுக (4 புள்ளிகள்)

(iii) இலங்கை வரலாற்றைக் கற்கும் போது மகாவம்சம் மிக நம்பகத்தன்மை வாய்ந்த மூலாதாரமாக விளங்குவதற்கு ஏதுவான காரணிகள் இரண்டினைக் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக. (5 புள்ளிகள்)

(iv) இலக்கிய மூலாதாரங்களின் பயன்களை மூன்று காரணிகளினூடாக விளக்குக. ( 6 புள்ளிகள்)

3. (i) வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் வாழ்ந்த மலைநாட்டு வெட்டவெளி வேட்டை நிலங்கள் இரண்டினையும், உலர் வலயக் குகை ஒன்றினையும் எழுதுக. (3 புள்ளிகள் )

(ii) முன் வரலாற்றுக் காலத்தை வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து வேறுபடுத்தி இனங்காணக்கூடிய விடயங்கள் இரண்டு எழுதுக. (4 புள்ளிகள்)

(iii) முன் வரலாற்றுக் காலத்தில் காணப்பட்ட முறையான மரண சடங்கு முறைகள் இரண்டினை உதாரணங்களுடன் விளக்குக. (5 புள்ளிகள்)

(iv) பண்டைய இலங்கையின் பொருளாதார முறையில் விவசாயம் ஒழுங்கமைக்கப்பட்டிருந்த விதத்தினை மூன்று உதாரணங்களினூடாக விளக்குக. (6 புள்ளிகள்)

4. (i) கீழே குறிப்பிடப்பட்டுள்ள அரச கோட்பாடுகளுடன் தொடர்புபட்டிருந்த ஆட்சியாளர்களை பெயரிடுக.

A - நரேஸ்வர
B - மலையின் அரசன்
C - சக்கரவர்த்தி (3 புள்ளிகள்)

(ii) அரச நிர்வாகத்துடன் தொடர்புடைய பின்வரும் நபர்கள் பண்டைய மூலாதாரங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தினை அடைப்புக்குள்ளிருந்து தெரிவு செய்து ஒழுங்கு முறைப்படி எழுதுக.

A - பொருளாளர்
B - நகர கட்டட நிர்மாணி
C - வர்த்தக நடவடிக்கைகளுக்கான தலைவர்
D - அரச செயலாளர்

(படகரிக, நகர வடிக, கன பெடிக, பன அதெக, ரூப அதெக ) (4 புள்ளிகள்)

(iii) புராதன இலங்கையில் அரசுரிமை கிட்டிய பிரதான இரு முறைகளையும் உதாரணங்களுடன் விளக்குக. ( 5 புள்ளிகள்)

(iv) துட்டகைமுனு மன்னன் இந்நாட்டில் தோன்றிய சிரேஷ்ட ஆட்சியாளனாவான் என்பதனை மூன்று காரணிகளூடாக விளக்குக (6 புள்ளிகள்)

5. (i) A - மகாவலி கங்கை
B - அம்பன் கங்கை
C - கலா வாவி ஆகிய நதிகளுடன் தொடர்புடைய கால்வாய்கள் ஒன்று வீதம் எழுதுக.
(3 புள்ளிகள்)

(ii) கீழே தரப்பட்டுள்ள செயற்பாடுகள் குளத்தின் எப்பகுதிகளின் மூலம் நிறைவேற்றப்படுகிறது என்பதை ஒழுங்கு முறைப்படி எழுதுக.

A - நீரலைகளால் ஏற்படும் அழுத்தத்தால் அணைக்கட்டு அரிப்புறுவதைத் தடுப்பதற்காக உருவாக்கப்பட்டது.
B - பாரிய குளங்களிலிருந்து நீரை கட்டுப்பாட்டுடன் திறந்து விடுவதற்கான மடைகதவை ஆதாரமாக் கொண்ட அங்கம்
C - குளத்தின் அடிப்பகுதியில் சேரும் சேற்றை வெளியேற்ற உதவும்.
D - குளத்து நீரை விவசாய நிலங்களுக்கு கொண்டு செல்லல். (4 புள்ளிகள்)

(iii) கி.பி. 1215 ஆம் ஆண்டு கலிங்க மாகனின் ஆக்கிரமிப்புக்குப் பின்னர் மக்கள் ஈரவலயங்களை நோக்கி இடம்பெயர்ந்த போது கவனத்திற் கொண்ட விடயங்கள் இரண்டினை குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக (5 புள்ளிகள்)

(iv) கோட்டை இராச்சியக் காலம் இலக்கியத்தின் பொற்காலமாகத் விளங்கியமைக்கு ஏதுவான மூன்று காரணிகளை உதாரணங்கள் மூலம் விளக்குக. (6 புள்ளிகள்)

6. (i) A - குசுமாசன தேவி
B - கொணப்பு பண்டார
C - யமசிங்க பண்டார
மேற்கூறப்பட்ட நபர்களின் கிறிஸ்தவப் பெயர்களை எழுதுக. (3 புள்ளிகள்)

(ii) கீழே தரப்பட்டுள்ள நிகழ்வுகளுடன் தொடர்புடைய நபர்களின் பெயர்களை அடைப்புக்குள்ளிருந்து தெரிவு செய்து எழுதுக.

A - சீதாவக்கை இராஜசிங்க மன்னன் கண்டியை ஆக்கிரமிக்கும் போது அவருக்கு உதவிய கண்டி பிரதானி
B - சௌரத் மன்னனால் ஊவா பிரதேசத்திற்கு நியமிக்கப்பட்ட இளவரசன்.
C - முதன் முதலில் கண்டியில் தலதா மாளிகை ஒன்றை அமைத்த மன்னன்
D - கோறளை எனும் பிராந்திய நிர்வாக அலகில் ஒவ்வொரு குலத்தவருக்கும் பொறுப்பாக விளங்கிய நபர் (4 புள்ளிகள்)

( கரலியத்த பண்டார, முகாந்திரம், விதானைமார், வீரசுந்தர பண்டார, விஜயபால இளவரசன், குமாரசிங்க இளவரசன், முதலாம் விமலதர்ம சூரியன், ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன்)

(iii) பின்வரும் பிரிவுகளின் கீழ் கண்டி இராச்சிய சமூக அமைப்பை விளக்குக.

(A) நிலத்தை அனுபவித்தல்
(B) திருமண முறைகள் (5 புள்ளிகள்)

(iv) கண்டி இராச்சியம் தொடர்பாக ஒல்லாந்தரின் குறிக்கோளில் காணப்படும் சிறப்பியல்புகள் மூன்றை உதாரணங்களுடன் விளக்குக. (6 புள்ளிகள்)

7. (i) கீழே தரப்பட்டுள்ள அம்சங்களுடன் தொடர்புடைய அரசியல் யாப்புச் சீர்திருத்தங்களைக் குறிப்பிடுக
A – சட்டவாக்கக் கழகம், சட்ட நிருவாகக் கழகம் அமைக்கப்பட்டமை

B - சட்டவாக்கக் கழகத்தில் முதன் முறையாக உத்தியோக சார்பற்றோர் பெரும்பான்மை பெற்றமை

C – வரையறுக்கப்பட்ட வாக்குரிமை அறிமுகப்படுத்தப்பட்டமை. (3 புள்ளிகள்)

(ii) டொனமூர் அரசியல் யாப்பின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட சீர்திருத்தங்கள் நான்கு எழுதுக. (4 புள்ளிகள்)

(iii) பிரித்தானியராட்சியின் கீழ் இலங்கையில் ஏற்பட்ட சமூக மாற்றங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக. (5 புள்ளிகள்)

(iv) சுதந்திரத்தின் பின்னர் விவசாய அபிவிருத்திக்காக அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மூன்றை சுருக்கமாக விளக்குக. (6 புள்ளிகள்)

## பகுதி III

8. (i) பிரித்தானியாவில் நிலக்கரிப்படிவுகள் அதிகமாகக் காணப்பட்ட மூன்று பிரதேசங்களைப் பெயரிடுக. (3 புள்ளிகள்)

(ii) கைத்தொழில் புரட்சியுடன் இணைந்த வகையில் விவசாயத்துறையிலும் பாரிய வளர்ச்சி எற்பட்டமைக்கு ஏதுவான காரணிகள் இரண்டினைக் குறிப்பிடுக (4 புள்ளிகள்)

(iii) இலங்கையின் பொருளாதாரத் துறையில் கைத்தொழில் புரட்சி செல்வாக்கு செலுத்திய விதத்தை இரு காரணிகளினூடாக விளக்குக. (5 புள்ளிகள்)


(iv) கைத்தொழில் புரட்சியினால் ஏற்பட்ட சாதகமான விளைவுகள் இரண்டினையும் பாதகமான விளைவு ஒன்றினையும் சுருக்கமாக விளக்குக. (6 புள்ளிகள்)


9. (i) இரண்டாம் உலக யுத்தத்தில் பங்கு பற்றிய அச்சு நாடுகள் மூன்றின் தலைநகரங்களைப் பெயரிடுக. (3 புள்ளிகள்)

(ii) முதலாம் உலக மகாயுத்தத்தின் போதிருந்த கீழ்வரும் நாடுகளின் தலைவர்களைப் பெயரிடுக.
A – ஐக்கிய அமெரிக்கா
B - பிரித்தானியா
C - பிரான்ஸ்
D - இத்தாலி (4 புள்ளிகள்)

(iii) முதலாம் உலக மகா யுத்தம் ஏற்பட்டமைக்கான உடனடிக் காரணத்தையும் இரண்டாம் உலக மகா யுத்தம் ஏற்படுவதில் தாக்கத்தை ஏற்படுத்திய உடனடிக் காரணத்தையும் சுருக்கமாக விளக்குக. ( 5 புள்ளிகள்)

(iv) உலக சமாதானத்தைப் பாதுகாப்பதற்கு ஐக்கிய நாடுகள் சபை எடுத்த முயற்சிகள் மூன்றினை சுருக்கமாக விளக்குக. (6 புள்ளிகள்)




N
Indian Ocean
Africa

*****